



ஆத்தூர் ஒன்றியம் என்.பஞ்சம்பட்டியில் நடைபெற்ற ஊரக பகுதிகளில் மக்களுடன் முதல்வர் நிகழ்ச்சியில் திமுக மாநில துணைப்பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சியர் மொ.நா.பூங்கொடி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், பழனி சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார், வருவாய் கோட்டாட்சியர் சக்திவேல், ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி, ஒன்றிய செயலாளர் முருகேசன் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### ஊரக வளர்ச்சித் துறை மூலம் - முதல்வரின்

# சாதனைத் திட்டங்கள் கிராமப்புற மக்களை 100 சதவிகிதம் சென்றடைகிறது!

## அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதம்

திண்டுக்கல், ஜூலை 13-

கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் ஏழை எளிய மக்கள் பயனடைய திமுக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் தங்கள் வீடு அருகே குடிசை மற்றும் ஓட்டு வீடுகளில் வசிப்பவர்களுக்கு உதவ வேண்டும் என்று ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி வேண்டுகோள் விடுத்ததோடு ஊரக வளர்ச்சித்துறை மூலம் தமிழக முதல்வரின் சாதனை திட்டங்கள் கிராமப்புற மக்களுக்கு 100 சதவீதம் சென்றடைகிறது என்று அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதமாக கூறினார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினரும், தி.மு.க. மாநில துணைப்பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமியை அவரது இல்லத்தில் ஆத்தூர் தொகுதியில் உள்ள கிராம ஊராட்சியைச் சேர்ந்த பொதுமக்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் நேரில் சந்தித்து தங்கள் கிராமங்களுக்கு தேவைப்படும் வசதிகள் நிழற்குடை, சமுதாயக்கூடம், நாடகமேடை, பகுதி நேர நியாய விலைக்கடைகள், உட்பட பல்வேறு கோரிக்கைகளுக்கு மனு கொடுத்து தீர்வு கண்டனர். அப்போது மாற்றுத்திறனாளி இருவர் தங்களுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வாகனம் வேண்டுமென கோரிக்கை மனு கொடுத்தனர். உடனே அவர்களுக்கு மூன்று சைக்கிள் வாகனம் வழங்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அதன்பின்னர் தி.மு.க. நிர்வாகிகள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி முத்தமிழ் அறிஞர் தமிழ் இன காவலர், செம்மொழி நாயகன், மறைந்த முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்களின் பெயர் தாங்கி வந்திருக்கும் திட்டமான கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் ஏழை எளிய மக்கள் பயனடைய திமுக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் தங்கள் வீடு அருகே குடிசை போட்டு வாழும் ஏழை மக்கள் மற்றும் ஓட்டு வீட்டில் வசிக்கும் எளிய மக்களின் நலன்கருதி அவர்களுக்கு கலைஞரின் கனவு இல்லம் திட்டம் மூலம் வீடுகள் பெற்றுத்தர உதவ வேண்டும். தமிழக அரசு எட்டு லட்சம் வீடுகள் கட்ட திட்டமிட்டு முதற்கட்டமாக ஒரு லட்சம் வீடுகளை கட்டித்தர உள்ளது. உள்ளாட்சி பிரதிநிதிகள் ஒவ்வொருவரும் ஏழை எளிய மக்களுக்கு உதவக்கூடிய வாய்ப்பாக இதை கருதி அவர்களுக்கு கலைஞரின் கனவு இல்லம திட்டம மூலம் வீடுகள் பெற்றுத்தர வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். திராவிட மாடல் ஆட்சி நாயகன், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழக அரசின் சாதனை திட்டங்கள் 100 சதவீதம் இன்று கிராமப்புற மக்களுக்கு கிடைத்து வருகிறது. அதில் ஊரக வளர்ச்சித்துறையின் பங்கும் அதிகம் உள்ளது என்றார். விக்கிரவாண்டி இடை தேர்தலில் தி.மு.க. வேட்பாளர் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று மாபெரும் சாதனை படைப்பார் என்றார்.

நிகழ்ச்சியின் போது தி.மு.க. தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், தி.மு.க. நிர்வாகி அம்பை ரவி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ப.ராஜேஷ் பெருமாள், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், திண்டுக்கல் மாநகர பொருளாளர் சரவணன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி,

பொதுக்குழு உறுப்பினர்கள் அக்பர், நெல்லூர் மலைச்சாமி, அகரம் பேரூராட்சிமன்ற தலைவர் மணி (எ) நந்தகோபால், மாவட்ட விவசாய அணி மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பண்ணைப்பட்டி ஜே. அருண், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன் முருகன், மாங்கரை ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் திருப்பதி, கொத்தப்புள்ளி ஊராட்சி மன்ற துணைத்தலைவர் ரெங்கசாமி, திண்டுக்கல் கிழக்கு பகுதி செயலாளர் ராஜேந்திரகுமார், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லைசுபாஷ், மற்றும் தாடிக்கொம்பு முருகேசன், காந்திகிராமம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் துரைப்பாண்டி, திண்டுக்கல் நகர தி.மு.க. நிர்வாகிகள் நந்திநடராஜன், நரசிங்கம், 7வது வார்டு வீரபாண்டி உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

### டெல்லி முதல்வர்

# அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு இடைக்கால ஜாமின்!

## உச்சநீதிமன்றம் உத்தரவு!

டெல்லி, ஜூலை 13-

டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு இடைக்கால ஜாமின் வழங்கி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அடிப்படை விசாரணைக்காக மட்டுமே ஒருவரை கைது செய்ய முடியாது என்றும் உச்சநீதிமன்றம் பரபரப்பு கருத்து தெரிவித்துள்ளது.

மதுபான கொள்கை வழக்கில் டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலை அமலாக்கத்துறை கடந்த மார்ச் மாதம் கைது செய்தது. இந்த விவகாரத்தில் சிபிஐ தரப்பிலும் வழக்குப்பதிவு செய்யப்பட்டு கடந்த மாதம் 26 ஆம் தேதி கெஜ்ரிவாலை சிபிஐ கைது செய்தது. இந்நிலையில், மதுபான கொள்கை தொடர்பான வழக்கு விவகாரத்தில் இடைக்கால ஜாமின் கோரியும், அமலாக்கத்துறை கைது நடவடிக்கை சட்டவிரோதம் என்று அறிவிக்க வேண்டும் என்றும் கெஜ்ரிவால் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கின் விசாரணை முடிந்து தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது. இந்நிலையில், டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு இடைக்கால ஜாமின் வழங்கி நீதிபதி சஞ்சீவ் கண்ணா தலைமையிலான அமர்வு உத்தரவிட்டுள்ளது. அமலாக்கத்துறை கைது நடவடிக்கை குறித்து உயர் நீதிபதிகள் அமர்வு விசாரிக்க வேண்டும் என்று 2 நீதிபதிகள் அமர்வு பரிந்துரை செய்துள்ளது. கெஜ்ரிவால் கைது நடவடிக்கை சட்ட விதிகளின் கீழ் நடைபெற்றதா? என்ற கேள்வி எழுந்துள்ளதாகவும், இது கவலை அளிப்பதாக உள்ளதாகவும் நீதிபதிகள் கூறினர். அமலாக்கத்துறை சட்டப்பிரிவு 19,45 ஆகியவை குறித்து விரிவான ஆய்வு செய்யப்பட வேண்டி உள்ளதால் மூன்று நீதிபதிகள் அமர்வு இந்த வழக்கை விசாரிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்ற 2 நீதிபதிகள் அமர்வு பரிந்துரை செய்துள்ளது. மேலும், அடிப்படை விசாரணைக்காக மட்டுமே ஒருவரை கைது செய்ய முடியாது என்றும் உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

# மாஸ்கோவில் - நரேந்திர மோடி...!
# மணிப்பூரில் - ராகுல் காந்தி...!

இந்திய உள்நாட்டில் ஒன்றரை ஆண்டு காலமாக மணிப்பூர் மனித இரத்தத்தால் சிவந்த பூமியாகிப் போனதைப் பார்க்க மறுத்துவிட்ட பிரதமர் நரேந்திர மோடி, இரஷ்ய நாட்டில் சிவப்புக் கம்பள வரவேற்பில் கால் பதியச் சென்றிருக்கிறார். அங்கு நடைபெறும் 22 ஆவது உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற அவர், இரஷ்ய அதிபர் புதின் அரசு மூலம் தந்த இராணுவ மரியாதையை ஏற்றுக் கொண்டதுடன், இரஷ்ய கால்டன் ஹோட்டலில் கலைஞர்களின் ஆடல், பாடல், கேளிக்கை விருந்திலும் கலந்து கொண்டு அகமகிழ்ந்து போயிருக்கிறார். இந்த மாநாட்டில் மின்சாரம், வர்த்தகம், எரிசக்தி பாதுகாப்பு ஆகிய துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பைப் பற்றிப் பேச உள்ளதான செய்திகளை யாரும் விமர்சனம் செய்யப் போவதில்லை. அண்டை நாடுகள், அயல் நாடுகள் இந்தியா நல்லுறவைப் பேணுவதில் எந்தவிதமான தவறுமில்லை. ஒன்றரை ஆண்டு காலமாக உள்நாட்டில் பிண மேடுகளைக் குவித்து வருகிற, இரத்தக்கறை படிந்த மணிப்பூர் பக்கம் இதுவரை எட்டிப் பார்க்காமல் தில்லி செங்கோட்டை சிம்மாசனத்தில் இருந்து வருகிற பிரதமர் மோடி, உலக நாடுகளைச் சுற்றி வருவது ஏன் என்று தான் கேள்வி எழுகிறது?

ஆனால், எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் கட்சித் தலைவருமான இராகுல் காந்தி, வடகிழக்கு மாநிலமான அசாம் மழை வெள்ளத்தில் மூழ்கிப் போயிருக்கிற துயரச் செய்தியைக் கேட்டவுடன், கடந்த ஏழாம் தேதி அங்குச் சென்று மக்களைச் சந்தித்துள்ளார்.

35 மாவட்டங்களின் 30 மாவட்டங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன. 53 ஆயிரம் பேர் நிவாரண முகாம்களில் அடைக்கலமாகி வாழ்வாதாரமின்றித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும், நூற்றுக்கு மேற்பட்ட உயிரிழப்புகள். 24 இலட்சம் பேர் இயல்பு நிலை இழந்த சூழ்நிலையில், மாவட்டங்களில் உள்ள புலோட்ல் நிவாரண முகாம் சென்று இராகுல் காந்தி மக்களிடம் சந்தித்து ஆறுதல் கூறியுள்ளார். அதேபோல், ஒன்றரை ஆண்டு காலமாக இயல்பு நிலை இழந்து, இனக் கலவரத்தால் வன்முறைக்கு ஆளாகியுள்ள மணிப்பூருக்கு இராகுல் காந்தி சென்றுள்ளார். ஜிரிபாம், சுராசந்த் போன்ற மாவட்ட முகாம்களுக்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து நிவாரணப் பணிகளில் குறைகளைக் கேட்டு ஆறுதல் கூறியுள்ளார்.

கடந்த ஆண்டு பாதிக்கப்பட்ட மணிப்பூர் மக்கள் நிலையறிந்த தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ரூபாய் 10 கோடி மதிப்பில் அத்தியாவசிய உதவிப் பொருட்கள், 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் நிவாரண முகாமில் தங்கி இருக்கிறவர்களுக்கு அத்தியாவசிய மருந்துகள், சானிட்டரி நாப்கின்கள், பால் பவுடர், உணவுப்பொருட்கள் வழங்கிட தமிழ்நாடு அரசு தயார் என அம்மாநில முதல்வர் பைரோன் சிங்குக்குக் கடிதம் எழுதினார். மாநில விளையாட்டு வீரர்களைத் தமிழ்நாட்டிற்கு வந்து பயிற்சிகள் மேற்கொள்ள அழைப்பு விடுத்ததுடன், ஆசிய விளையாட்டு, கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள், தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளுக்கு சாதகமான சூழ்நிலை உள்ள தமிழ்நாட்டில் உயர்தரப் பயிற்சி பெற அனைத்து ஏற்பாடுகளும் செய்து தரப்படும் என்று முதல்வர் மு.க. ஸ்டாலினும், அமைச்சர் உதயநிதி ஸ்டாலினும் கடிதம் எழுதி வேண்டுகோள் வைத்தனர். நாடாளு மன்றத்தில் டி.ஆர். பாலு, கனிமொழி, தயாநிதி மாறன், ஆ. இராசா போன்றவர்கள் மணிப்பூர் தொடர்பான கேள்விகளை எழுப்பி வந்தார்கள்.

மணிப்பூர் வரலாறு என்ன? மணிப்பூரில் கடந்த ஆண்டு நடைபெற்ற வன்முறை உயிர்ச் சேதங்கள் மற்றும் பாலியல் வல்லுறவுகள் குறித்து நேரடியாக பார்வையுற்று மணிப்பூரில் இனக் கலவரத்தை கட்டுபடுத்துவதில் ஒன்றிய மாநில அரசுகள் முற்றிலும் தோல்வி அடைந்து விட்டன என்றும் இந்த விவகாரத்தில் பிரதர் மோடி மௌனம் சாதிப்பது அவரது முழு அலட்சியத்தை வெளிக்காட்டுகிறது என்றும் 26 எதிர்க் கட்சிகளின் இந்தியா கூட்டணியைச் சேர்ந்த 21 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு குற்றம் சாட்டியுள்ளது.

“மணிப்பூரில் அமைதி திரும்பி விட்டது என்பது பொய்; அனைத்து சமூக மக்களுக்குமே அரசு மீது நம்பிக்கை இல்லை. பாதுகாப்பு கோரி மணிப்பூர் மக்கள் இன்றும் போராடி வருகிறார்கள். பாலியல் வன்கொடுமைகளால் பாதிக்கப்பட்ட பெண்களைப் பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் சந்தித்துப் பேசினோம். காப்பாற்ற வேண்டிய காவல் துறையே எங்களை அழைத்துக் கொண்டு போய் வன்முறைக் கும்பலிடம் விட்டுவிட்டது என்று பாதிக்கப்பட்ட பெண்கள் புகார் தெரிவித்தனர்” என்று கனிமொழி கருணா நிதி எம்.பி (தி.மு.க.) செய்தியாளர்களிடம் கூறினார். பா.ஜ.க.வின் அரசியல் சூழ்ச்சியே மணிப்பூரில் வாழும் மக்களிடையே பிளவு உருவாகக் காரணமாயிற்று.

கிழக்கே மியான்மர் நாடு, மேற்கில் அசாம், தெற்கில் மிசோரம், வடக்கில் நாகலாந்து என்பதான இந்திய நிலப்பரப்பின் நடுவில் உள்ளது தான் மணிப்பூர் மாநிலம். தலைநகர் இம்பால்.

1947 வரை மன்னர் முடியாட்சி, 1949இல் இந்தியாவுடன் இணைப்பு. 1956 வரை இந்தியாவின் ஒன்றிய பகுதி, 1976 தனி மாநிலமாக மணிப்பூர் மலர்ந்தது. 1992 இல் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணை மொழிகளில் மணிப்பூரி தாய் மொழியாகச் சேர்க்கப்பட்டது.

38 இலட்சம் மக்கள் தொகை கொண்ட மணிப்பூர் மாநிலத்தில், மெய்டெய் மற்றும் குக்கி, நாகா, சோமி என 36 விதமான இனக்குழுக்களும், மதக் குழுக்களுமாகப் பல்வேறு மக்கள் வாழ்கிறார்கள். ‘தலைநகர் இம்பாலைச் சுற்றியுள்ள சமவெளிப் பகுதிகளில் பெரும்பான்மை இந்துக்களான மைத்தி எனும் மெய்டெய் (Meitei) இனத்தவர் 53 விழுக்காடு மக்கள் கல்வி, அரசியல், பொருளாதாரம், அரசுத் துறை வேலை வாய்ப்பு, தொழில், வாணிபம் என்பன போன்ற அனைத்துத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்துபவர்களாக உள்ளனர் .மற்ற குக்கி , நாகா,சோமி, இனத்தவர் 30 விழுககாடு மக்கள் பழங்குடி வகுப்பபைச் சேர்ந்தவர்கள். பழங்குடியைச் சேர்ந்த குக்கி இனத்தவர் பெரும்பாலும் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள்.

பெரும்பான்மை இந்துக்களான மெய்டெய் இனத்தவரிலும், சுமார் இரண்டு லட்சம் பேர் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள் உண்டு. ஒரு நாடாளுமன்றத் தொகுதியும், 60 சட்டமன்றத் தொகுதிகளும் உள்ளவற்றில், 40 பேர் மெய்டெய் சமூகம் ஆதிக்கம் செலுத்தும் மாநிலமாகும்.

அரசியல் அமைப்புச் சட்டம் 371 சி பிரிவின் கீழ் அரசு வெளியிட்ட அறிவிப்புப் படி 90 விழுக்காடு மலைப்பகுதிப் பழங்குடியினர் அல்லாதவர்கள் யாரும் நிலம் வாங்குவதற்கு முடியாது. அதே நேரத்தில் பழங்குடியின மக்கள் சமவெளி, பள்ளத்தாக்கு பகுதிகளில் நிலம் வாங்கிக் கொள்ளவும் அனுபவிக்கவும் உரிமை உண்டு. எனவே, உயர் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்துக் கல்வி, வேலை வாய்ப்பு, பொருளாதாரம், நிலம் அனுபவ உரிமை அனைத்தும் பறிபோகும் நிலையை எண்ணி குக்கி இன மக்கள் போராட்டத்தைத் தொடங்கினார்கள்.

இது நாள் வரை ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்த அனைத்து இனத்தவரும் பா.ஜ.க அம்மாநிலத்தில் வந்ததும், பிரிவினை அரசியல் செய்ய ஆரம்பித்து விட்டது. 2022 -ல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. 32 இடங்களை வென்று ஆட்சியை பிடித்தது. மாநிலத்தில் பா.ஜ.க. வின்



**கவிஞர் தமிழ்தாசன்**
தி.மு.க. தீர்மானக் குழுத் தலைவர்

வெறுப்பரசியல், மதம், பொருளாதாரச் சுரண்டல் உள்ளிட்ட காரணங்களுக்கும், வன்முறை, கலவரங்களை உருவாக்கிய மொத்த வடிவமே பைரோன் சிங் அரசின் பாசிச நடவடிக்கைச் செயல்பாடுகள் ஆகும். 2013 ஆம் ஆண்டு முதல் அரசியல் ஆதிக்கம் செலுத்தி வந்த மைத்தி எனும் மெய்டெய் இனத்தவர்கள் தங்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துப் போராட ஆரம்பித்தனர். ஆனால் இதனை குக்கி, நாகா, சோமி பழங்குடி இனத்தவர்கள் கடுமையாக எதிர்த்தார்கள்.

இந்நிலையில் மைத்தியினர் போராடி வந்ததைப் பயன்படுத்தி தேர்தலில் அவர்களுக்கு பா.ஜ.க போலி வாக்குறுதிகள் கொடுத்து “இந்துத்துவா கொள்கையை உள்ளே புகுத்தியது. 2017 ஆம் ஆண்டு மெய்டெய் இனத்தவரை இந்து சங்கிகளாக ஆக்கிட, ஆர்.எஸ்.எஸ், பஜ்ரங்தள் போன்ற அமைப்புகளைச் சார்ந்த பா.ஜ.க. தூண்டிவிட்டது. முதல்வர் பைரோன் சிங் மெய்டெய் குழுக்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்து இருந்த அதே நேரத்தில் குக்கி, நாகா மக்களிடம் வாக்குகளை கவர்வதற்குக் கபட நாடகம் நடத்தி வந்தார்.

இதற்கு இடையில் அரசு மறைமுகமாகத் தூண்டிவிட்டு மெய்டெய் இன அமைப்பினரை வழக்குப் போட வைத்தது. அந்த வழக்கில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பும் கலவரத்துக்குக் காரணமாயிற்று. “இந்திய அரசியலமைப்பில் உள்ள பழங்குடியினர் பட்டியலில் மைத்தி சமூகத்தைச் சேர்ப்பது குறித்து நான்கு வாரங்களுக்குள் ஒன்றிய அரசுக்குத் தனது பரிந்துரைகளை மாநில அரசு வழங்க வேண்டும் “என்று மணிப்பூர் நீதிமன்றம் உத்தரவிட்டது. உயர்நீதி மன்ற தீர்ப்பை குக்கி, நாகா பழங்குடி அமைப்புகள் கடுமையாக எதிர்த்தன.

“குக்கி இன மக்கள் சட்ட விரோத வெளியாட்கள்; கஞ்சாப் போதை கடத்தும் பயங்கரவாதிகள், சட்ட விரோதமான சமூகம்; அவர்கள் குடும்பத்தின் ஒரு பகுதியாக இல்லை; மியான்மர், பங்களாதேஷ் நாடுகளிலிருந்து அகதிகளாக இடம் பெயர்ந்து வந்தவர்கள் என்பதால் அவர்கள் மணிப்பூரின் பூர்வீகமும் அல்ல” என்று இப்படியான பிரிவினை வாதம் செய்து, முதல்வர் பைரன்சிங் போன்றவர்கள் மெய்டெய் இனத்தவர்கட்கு ஆதரவாகப் பேசி வந்தனர்

மணிப்பூர் மாநில இனக் குழுக்களைப் பிரிக்கும் வகையில் பிளவுப் படுத்தும் காரணங்களில் 500 ஆண்டு காலமாகப் பின்பற்றும் ”சனமகி” பண்பாடும் ,பார்ப்பன இந்துமத பண்பாடும் ஒன்று கலந்த இனம் என்று கூறி, அரம்பை, (Arambai) டென்கோல் (Tengol) மெய்டெய் லீபன் (meitei leepun) இனத் தீவிரவாதக் குழுக்களுக்குப் ஆதரவளித்து, பா.ஜ.க அரசு அரசியல் குளிர் காய்ந்தும் வந்தது. அத்துடன் நல்லிணக்கத்துடன் வாழ்ந்து வந்த இரு வேறு இனச் சமூகங்களிலுள்ள பெண்களைப் பாலியல் வன்கொடுமை செய்வதாகப் பொய்ச் செய்திகளைப் பரப்பி வெறுப்புணர்வைத் தூண்டியும் வந்தது.. கசகசா சாகுபடியைத் தடை செய்து, அவர்கள் தொழில் செய்வதைப் பறிக்கும் விதத்தில் பழங்குடி மக்களுக்கு எதிராக உத்தரவிட்டது. சட்ட விரோதமாக வந்த வெளியாட்கள் (Illegal outsiders) என்று பிரச்சாரங்களையும் பாசிச பா.ஜ.க. அரசு முடுக்கிவிட்டது.

மக்களிடையே மோதல்களை உருவாக்கிய ஒன்றிய மாநில பா.ஜ.க. அரசுகளை எதிர்த்தும் உயர் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்தும் கடந்த மே 3 அன்று அனைத்து பழங்குடி மாணவர் சங்கம் (The All Tribal Student’s Union, ManipurATSUM) சார்பில் மாநிலம் எங்கும் 12 மணிநேரம் முழு அடைப்பும், 7 மலை மாவட்டங்களில் பத்து இடங்களில் அணிவகுப்புப் பேரணியும் நடத்தியது. இதில் 75,000த்திற்கு மேற்பட்ட பழங்குடியினர் பங்கேற்றனர். பேரணியைச் சீர்குலைக்க மெய்டெய் இனத்தவர் தாக்குதல் தொடுக்கவே வன்முறை வெடித்து பெரும் கலவரமாகியது. எதிர்ப்பு குரல் எழுப்பி வந்த குக்கி இனப் பழங்குடி மக்களைத் தாக்கிய விவரம் அறிந்து, மாநிலம் முழுவதும் மிகப்பெரிய கலவரமாக உருவெடுத்தது.

வன்முறையைக் கட்டுப்படுத்த 11 மாவட்டங்களில் 144 தடை உத்தரவு, இணையதளம் முடக்கம், சி.ஆர்.பி.எஃப், அசாம் ரைபிள்ஸ், துணை இராணுவப்படைகள், காவல் படைகள் என்பன வற்றை மாநிலம் முழுவதும் பாதுகாப்பு பணிக்கு ஈடுபடுத்தி இருந்தனர். ஆனாலும், அரசால் வன்முறையைக் கட்டுக்குள் கொண்டு வர முடியவில்லை. இதனால் 150 பேருக்கு மேல் கொல்லப்பட்டார்கள். ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் படுகாயம் அடைந்தனர். 5,000க்கும் மேற்பட்ட வீடுகள் எரிக்கப்பட்டதால் குடியிருப்பின்றி ஏதிலிகளாகத் தவிக்கின்றனர். 300க்கும் மேற்பட்ட முகாம்களில் உற்றார் உறவினர் தொடர்பின்றித் தவிக்கின்றனர். 60 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் சொந்த மாநிலத்திலேயே இடம் பெயர வேண்டிய துயரச் சூழ்நிலை ஏற்பட்டது. வழிபாட்டுத் தலங்களான 357 கிறிஸ்துவ ஆலயங்களும், இருபதுக்கும் மேற்பட்ட இந்து ஆலயங்களும் வன்முறையாளர்களால் எரிக்கப்பட்டன.

வன்முறையாளர்களால் ஒன்றியத் தொழில்துறை மந்திரி நெமிசாகிப் ஜெனின் பங்களாவுக்குத் தீ வைத்து எரித்ததுடன், வெளியுறவுத்துறை, கல்வி இணை மந்திரி இராஜ்குமார் ரஞ்சன் சிங் வீடு மீது பெட்ரோல் குண்டும் வீசப்பட்டது. 3 - முறை பா.ஜ.க சட்டமன்ற உறுப்பினர் ஆன குக்கி பழங்குடி கிறிஸ்துவ சமூகத்தை சேர்ந்த உன்கசின் வாடேவும் மதவாத கும்பல் இரும்பு கம்பியால் தாக்கியதால் தாடை, மண்டை ஓடு உடைந்து முடங்க வைத்தது. 2 மாத காலமாக டெல்லி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தவரை பா.ஜ.க. அமைச்சர்களோ, தலைவர்களோ சென்று பார்த்து ஆறுதல் கூறவில்லை என்று அவரது மனைவி மற்றும் மகனும் கூறி வருத்தப்படுவதை இந்தியா டுடே ஏடு எழுதியுள்ளது.

நாகாலாந்து கலவரப் பூமியாகி இரத்தம் சிந்திக் கொண்டிருந்த நேரத்தில் வராத இந்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா 55 நாட்களுக்குப் பின்னர் கடந்த ஆண்டு ஜீன் 24 ஆம் தேதி நாகலாந்து வந்தார். நான்கு நாள் பயணமாக வந்த அவர், அமைதிக் குழு ஒன்றை ஏற்படுத்துகிறேன் என்று சொல்லி மாநில ஆளுநர் அனுசுயா உய்கே தலைமையில் 57 பேர் கொண்ட குழு ஒன்றை நியமித்தார். அக் குழுவில் மெய்டெய் இனத்தவர் 25 பேர், குக்கி இனத்தவர் 11 பேர், நாகா இனத்தவர் 10 பேர், முஸ்லீம் - 3 பேர், நேபாள் 2 பேர் என்று நியமிக்கப்படுவதாகக் கூறி அறிவித்தார். ஆனால், கூட்டம் கூட்டிய போது அக்கூட்டத்தில் மாநில முதல்வர் பைரோன் சிங் கலந்து கொள்ள வந்தால், நாங்கள் பங்கேற்க மாட்டோம் என்று கூறிக் குக்கி இனம் போன்ற மற்ற இன மக்கள் புறக்கணித்தனர்.

குக்கி இனத்தைச் சேர்ந்த 10 - பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் அவர்களுக்குத் தனியாக நிர்வாக அமைப்பு வேண்டும் என்று கூறிக் கேட்டபோது, அமித்ஷா அதற்கு அனுமதி வழங்க முடியாது எனத் தவிர்த்தார். மணிப்பூர் முதல்வர் பைரோன் சிங் பதவி விலக வேண்டும் என்று பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் உட்பட அனைத்துத் தரப்பிலும் குரல் எழுப்பினர்.

மணிப்பூர் வன்முறையில் இதுவரை உயிர்ப் பலியானவர்கள் 200 பேருக்கு மேல் இருப்பர் என்றாலும், அதில் 114 பேர் குக்கி, ஜோ சமூகத்தினர் என்றும் ஊடகச் செய்திகளில் வெளியான 2 பெண்கள் தவிர, நர்சிங் மாணவி உட்பட மேலும் இரண்டு பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டு இருப்பதாகவும், குக்கிப் பிரிவைச் சேர்ந்த 10 எம்.எல்.ஏ.க்கள் கூட்டறிக்கை வெளியிட்டனர். இந்த விவகாரத்தில் சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்றும், மணிப்பூர் மக்கள் தொகையில், 40 விழுக்காடு இருக்கும் குக்கி, ஜோ, நாகா பழங்குடி மக்கள் அங்குள்ள மலைப்பிரதேசங்களில் வாழ்ந்து வர அவர்களுடைய நிலங்களையோ, வாழ்விடங்க ளையோ யாருக்கும் விற்கவோ, வாங்கவோ கூடாது என்றும் ஒன்றிய அரசுக்குக் கோரிக்கை வைத்துள்ளனர்.

இவ்வளவு கலவரச் சாவுகளுக்குக் காரணமான மணிப்பூர் மாநில முதல்வர் பைரோன்சிங் பதவி விலக வேண்டும் என்று பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் உட்பட அனைத்து தரப்பிலும் குரல் எழுப்பி வருகின்றனர். மணிப்பூரில் இரண்டு பெண்கள் நிர்வாணப்படுத்தி சாலை வயல்வெளிகளில் இழுத்துச்சென்று வல்லுறவு செய்யப்பட்ட விவகாரத்தை எதிர்க்கட்சிகள், ஊடகங்கள் கேள்வி எழுப்பி வருகின்றன.

“மணிப்பூரில் நடந்த சம்பவத்தால் இந்தியாவிற்கு அவமானம் ஏற்பட்டு இருக்கிறது. பிரதமர் மோடி இன்னும் தூங்கிக் கொண்டிருக்கிறார். மணிப்பூர் முதல்வர் பைரோன் சிங்கை பணியில் இருந்து நீக்கும் தைரியம் பிரதமருக்கு இல்லை. ஒரு மனிதனாக மணிப்பூரில் நடந்த சம்பவத்தை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ஆதலால் கனத்த இதயத்துடன் பா.ஜ.க. விலிருந்து விலகுகிறேன்”. என்று பீகார் மாநில பா.ஜ.க. செய்தி தொடர்பாளர் வினோத் சர்மா கூறியுள்ளார்

இவ்வளவு பெரிய சோக நிகழ்வு நடைபெற்றது அதற்காக எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எதிர்க்கட்சிகள் ஊடகங்கள் எல்லாம் கேட்ட போதும், பதில் ஏதும் சொல்ல முன் வராத பிரதமர் மோடி, தன் தவற்றை மறைக்க நாடாளுமன்றத்திற்கும் வரமறுக்கிறார்; ஓடி ஒளிகிறார்.

கடந்த ஆண்டு ஜீன் 23ஆம் தேதி மோடி அமெரிக்கா சென்றபோது அவருடைய வருகையை 75 அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்து புறக்கணித்தனர். அப்படிப்பட்ட பிரதமர் மோடி உள்நாட்டில் இந்திய நாடாளுமன்றத்தில் மணிப்பூர் விவகாரத்தை பேச நாடாளுமன்றம் வர மறுப்பது ஏன்? பேச பயப்படுவது ஏன்? பதில் கூற தயாரா?

ஒரு நாட்டினுடைய பிரதமர் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திக்காமல் வெளிநாடு, வெளிநாடு என்று சுற்றிக் கொண்டிருக்கிறார். உள்நாட்டிலும் உட்கார்ந்து கொண்டு, உல்லாச மாளிகையான தில்லிச் செங்கோட்டை நாற்காலியில் செவி, கண், வாய்களை மூடிக்கொண்டு மௌனம் காக்கிறார்.

ஆனால், ஒரு எதிர்க்கட்சித் தலைவர் இராகுல் பாதிக்கப்பட்ட மக்களை அடிக்கடிச் சந்தித்துக் கொண்டிருக்கிறார். ஆம்; மணிப்பூரில் இராகுல் காந்தி!.... மாஸ்கோவில் நரேந்திர மோடி!....